# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2353/77 - 2023 ඔක්තෝබර් මස 14 වැනි සෙනසුරාදා - 2023.10.14

*2353/77 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

பிரிவு 2 மற்றும் 5 இன் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இங்குள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டம் தொடர்பாக அதற்கு நேரொத்த பதிவிலே அவ்வட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டள்ள அளவிலான விசேட வியாபாரப் பண்ட அறவீட்டினை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| பண்டம் உருப்படி | | | | விசேட வியாபார பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 03.02 | | மீன், புதியது அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந்தவை | ஒரு கிலோவுக்கு 10% அல்லது ரூ. 400 இதில் எந்த அறவீடு அதிகமோ அது |
| | 03.03 | | மீன், குளிரால் உறையச் செய்யப்பட்டவை, தலைப்பு 03.04 இன் கீழான முள்ளற்ற துண்டுகள் மற்றும் பிற மீன் இறைச்சி நீங்கலாக. | ஒரு கிலோவுக்கு 10% அல்லது ரூ. 400 இதில் எந்த அறவீடு அதிகமோ அது |
| 2 | 03.05 | 0305.59.10 | மாசி மீனும் அதற்குப் பதிலானவையும் | ஒரு கிலோவுக்கு ரூ. 302 |


1A - PG 6503 — 431 (2023/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*அட்டவணை (தொடர்ச்சி)*

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| பண்டம் உருப்படி | | | | விசேட வியாபார பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 3 | 07.13 | 0713.40.11 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) - முழுமையானவை | ஒரு கிலோவுக்கு 25 சதம் |
| | | 0713.40.12 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) - பிளக்கப்பட்டவை | ஒரு கிலோவுக்கு 25 சதம் |
| | | 0713.40.21 | மஞ்சள் பருப்பு - முழுமையானவை | ஒரு கிலோவுக்கு 25 சதம் |
| | | 0713.40.22 | மஞ்சள் பருப்பு - பிளக்கப்பட்டவை | ஒரு கிலோவுக்கு 25 சதம் |
| 4 | 08.04 | 0804.50.50 | மங்குஸ்தான் பழங்கள் புதியவை | ஒரு கிலோவுக்கு ரூ. 200 |
| | | 0804.50.60 | மங்குஸ்தான் பழங்கள் காய்ந்தவை | ஒரு கிலோவுக்கு ரூ. 200 |
| 5 | 08.10 | 0810.50 | கிவி பழம் | ஒரு கிலோவுக்கு ரூ. 175 |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், கீழ்வருவனவற்றின் வரிவிலக்குக்கான கட்டளையொன்றினை விதிக்கின்றேன் :

(அ) மீன்பிடித்துறைக்கு பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின் பேரில் உள்நாட்டு தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்தியாளர்களினால் தகரத்திலடைக்கப்பட்ட மீன் உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் மேற்காட்டப்பட்ட அட்டவணையில் பட்டியலிடப்பட்ட, இயைபுமுறைத் தலைப்பு 03.03 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டு, இயைபுமுறைக் குறியீடு 0303.54 இன் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டதுமான மெகரல் எனும் மீன் வகை (ஸ்கொம்பர் ஸ்கொம்றஸ், ஸ்கொம்பர் அவுஸ்ராலாசியஸ், ஸ்கொம்பர் ஜபோனிகஸ்) மற்றும் முயைபுமுறைக் குறியீடு 0303.55 இன் கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட ஜெக் மற்றும் ஹோஸ் மெகரல் மீன் (ட்ராச்றஸ் இன) ஆகியவற்றின் இறக்குமதி மீதான கிலோ ஒன்றுக்கு ஏற்புடையதான 10% விசேட வியாபாரப் பண்ட அறவீடான 06 ரூபாவினை அல்லது கிலோ ஒன்றுக்கான ரூ. 400 இனை சேகரித்ததன் பின்னர் மீதித் தொகையினை தள்ளுபடி செய்வதற்கு ;

(ஆ) 2343/11 ஆம் இலக்க, 2023, ஒகத்து 01 ஆந் திகதிய, 2023, ஒற்றோபர் 30 ஆந் திகதி வரை செல்லுபடியாகும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கட்டளைக்கமைவாக கடற்றொழிலியல் மற்றும் நீரியல் வழங்கல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டுள்ள ஏதாவது ஒரு இறக்குமதியாளர் இறக்குமதி செய்யப்படும் கீழ்காட்டப்பட்ட அட்டவணையில் பட்டியலிடப்பட்ட, இயைபுமுறைத் தலைப்பு 03.03 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட மீன் இறக்குமதியின் மீதான கிலோ ஒன்றுக்கு ஏற்புடையதான 10% விசேட வியாபாரப் பண்ட அறவீடான 275 ரூபாவினை அல்லது கிலோ ஒன்றுக்கான ரூ. 400 இனை சேகரித்ததன் பின்னர் மீதித் தொகையினை தள்ளுபடி செய்வதற்கு.

**அட்டவணை**

| இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் |
|---|---|---|
| 03.03 | 0303.49.00<br>0303.59.00<br>0303.89.00 | தலபத் மீன், கொப்பரா மீன் மற்றும் கட்டா மீன் |

3. இந்தக் கட்டளையானது, 2 (ஆ) பந்தி தவிர 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உட்பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்குட்பட்டு 2023, ஒற்றோபர் 14 ஆந் திகதியிலிருந்து ஆரம்பமாகும் ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும்.

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, ஒற்றோபர் 14.

EOG 10-0185

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.